මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு


පොදු කාර්යාලය : 011-2868441இ 2868442இ 2868443
பொதுஅலுவலகம்
**General Office**
ෆැක්ස්.:.தொலைநகல்.:.குயஒ:011-2868426
***Web: www.elections.gov.lk***

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත, රාජගිරිය(10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரணமாவத்தை, இராஜகிரிய (10107)
***e-mail: info@elections.gov.lk***


| | | |
|---|---|---|
| මගේ අංකය: எனது இல. : EC/EDR/LAE/2025/06 | ඔබේ අංකය: உமது இல.: | දිනය: திகதி: 2025.03. 11 |

**சுற்றறிக்கை இல.LAE/2025-08**

போட்டியிடுகின்ற அனைத்து அரசியற் கட்சிகளின் செயலாளர்கள்/
அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோருக்கு,

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2025**
**தேர்தல் பிரச்சார அலுவலகங்களைத் தாபித்தல்**

எதிர்வரும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்குரிய தேர்தற் பிரச்சார அலுவலகங்களைத் தாபித்து நடாத்திச் செல்லும்போது பின்பற்றியொழுக வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக தங்களது கவனத்தை ஈர்ப்பதற்காக இக்கடிதம் வெளியிடப்படுகின்றது.

02. 2017 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தில் (262 ஆம் அத்தியாயம்) கட்சி/ வேட்பாளர் பிரச்சார அலுவலகங்களைத் தாபித்தல் தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இருப்பினும், இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களைத் தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வேட்பாளர்களின் பிரச்சாரத் தேவைகளைக் கவனத்திலெடுத்து பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய குறித்த பிரதேசத்தின் கிராம அலுவலர் மூலம் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கும், உரிய பொலிஸ் நிலையத்திற்கும் அறிவித்து தாபிக்கப்படும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரச்சார அலுவலகங்களைத் தாபிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

03. போட்டியிடுகின்ற அனைத்துக் கட்சிகளுக்கும் / குழுக்களுக்கும் ஓர் உள்ளூர் அதிகார சபைக்கு ஒரு மத்திய அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகத்தைத் தாபிக்க முடியும்.

04. அதற்கமைய, போட்டியிடுகின்ற ஒரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு வட்டாரமொன்றுக்கு ஓர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை அலுவலகத்தை மாத்திரம் நிரந்தரக் கட்டிடமொன்றில் தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்படும். அதற்கான கோரிக்கை, அதிகாரமளிக்கப்பட்ட முகவரினால் சுயேச்சைக் குழுவொன்றாயின், குழுத் தலைவரினாலும் கட்சியொன்றாயின், கட்சிச் செயலாளரினாலும்/ செயலாளரினால் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவரினாலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதோடு, அத்தகைய அலுவலகங்கள் வேட்பாளரொருவருக்கு மாத்திரம் குறித்தொதுக்கப்பட்ட அலுவலகமொன்றல்லவெனவும், குறித்த கட்சி/குழு சார்பாக குறித்தொதுக்கப்பட்ட அலுவலகமெனவும் வலியுறுத்தப்படுகின்றது. பல் அங்கத்தவர் வட்டாரமொன்றில் மாத்திரம் சிறப்பான ஒரு சந்தர்ப்பமாகக் கருதி உரிய அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கை கொண்ட அலுவலகங்களைத் தாபிக்க முடியுமென்பதோடு, அதற்கு தனிவேறாக அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

05. அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய அலுவலகங்களில் கட்சியின் பெயர், சின்னம், கட்சித் தலைவரின் உருவப்படம் மற்றும் தேவையெனில், அனைத்து வேட்பாளர்களினதும் உருவப்படங்களைக் கொண்ட ஒரு பிரச்சாரப் பலகையை மாத்திரம் காட்சிப்படுத்த முடியும். அத்தகைய அலுவலகங்கள் அமையப் பெற்றுள்ள காணியை சோடனை செய்தல் தொடர்பில் ஆட்சேபனையொன்றில்லை. இருப்பினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெருந்தெருக்கள், பாதையோரங்கள் (நடை பாதை) அல்லது மின் கம்பங்கள், தொலைபேசிக் கம்பங்கள் ஆகியவற்றில் இதனோடு தொடர்புடைய சோடனைகள் செய்யப்படலாகாது.

06. அரசாங்க உத்தியோகபூர்வ குடிமனைகளில் அல்லது மதத்தலங்களில் பிரச்சார அலுவலகங்களைத் தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதைக் கனத்திற்கொள்ளவும்.

07. இவ்வனைத்து அலுவலகங்களிலும் ஒரு பிரச்சாரப் பலகையைப் பொருத்துவதற்கும் அலுவலக வளவினுள் சோடனைகளைச் செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்க முடியுமென்றபோதிலும், அவ்வாறான அனைத்து அலுவலகங்களிலும் உள்ள பலகைகள் மற்றும் சோடனைகள் வாக்கெடுப்புத் தினத்திற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் அகற்றப்படல் வேண்டும்.

08. அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்கள் தொடர்பாக அறிவிப்பதற்காக இத்தோடு இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தை ஒவ்வோர் அலுவலகத்திற்காகவும் மூன்று (3) பிரதிகளில் பூரணப்படுத்தி கிராம அலுவலருக்குச் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதோடு, அவ் (3) பிரதிகளையும் உரிய பொலிஸ் நிலையத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் அப்பிரதிகள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு அலுவலகத்தைத் தாபிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டு ஒரு பிரதியை பொலிஸ் நிலையத்தில் வைத்துக்கொண்டு மற்றைய பிரதிகள் இரண்டையும் (2) விண்ணப்பித்தவருக்கு வழங்கப்படும். அப் பிரதிகள் இரண்டையும் (2) மாவட்ட பிரதி.்.உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அதாவது உள்ளூர் அதிகார சபையைப் பொறுப்பான தெரிவத்தாட்சி சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதோடு, அதில் ஒரு பிரதி தெரிவத்தாட்சி அலுவலர் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் வைத்துக்கொண்டு மற்றைய பிரதி மாத்திரம் விண்ணப்பித்தவருக்கு வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படுகின்ற அனுமதியளிக்கப்பட்ட படிவத்தை எல்லா நேரங்களிலும் அலுவலகத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு வருகை தருகின்ற, தேர்தல் ஆணைக்குழுவினால் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரினால் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அல்லது பொலிஸ் அலுவலர்களுக்கு எளிதில் அவதானிக்கத்தக்க விதத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

09. எந்தவோர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகத்தையும் அரச/ மாகாண சபை/ உள்ளூர் அதிகார சபை / அரச கூட்டுத்தாபனம் அல்லது சபைக்குச் சொந்தமான கட்டிடமொன்றில், இடமொன்றில், உத்தியோகபூர்வ விடுதியொன்றில், ஒதுக்குக் காணியொன்றில் தாபிக்க முடியாது. இருப்பினும், காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தற்போதும் அரசுடைமையானதாகவுள்ள குடியேற்ற வீடொன்றில் அல்லது அரசுடைமையான வீட்டுத் தொகுதியொன்றின் வீடொன்றில் முறைப்படியான அனுமதியோடு அலுவலகமொன்றாகப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படும்.

10. (I) ஏதேனுமொரு கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அலுவலகமொன்றில், வேறு கட்சியொன்றின் அல்லது வேறு குழுவொன்றின் அல்லது வேறு கட்சியொன்றின்/ குழுவொன்றின் வேட்பாளரொருவரின் சுவரொட்டிகள், உருவப்படங்கள், பதாகைகள் என்பவற்றைக் காட்சிப்படுத்துவது முற்றிலும் தடைசெய்யப்பட்டதாகும். வேறு கட்சியொன்றின் அல்லது வேறு கட்சியொன்றின் வேட்பாளரொருவரின் புகைப்படங்கள்/ பெயர்கள், உரிய வாக்கியங்கள் என்பன வெளிக்காட்டி வைக்கப்படுமாயின், அது அனுமதி பெறப்படாத அலுவலகமொன்றாக் கருதி அகற்றப்படுமென்பதோடு, சட்டமீறல் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

(II) ஏதேனுமொரு கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அலுவலகமொன்றில் கட்சியின்/ குழுவின் வேட்பாளரொருவரின் பெயரை மாத்திரம் காட்சிப்படுத்த முடியாது என்பதோடு அக்கட்சிக்குரிய/ அக்குழுவுக்குரிய தேர்தல் சின்னம், வேட்பாளரின் பெயர் காட்டப்பட்டுள்ள ஒத்த அளவில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும். சுயேச்சைக் குழு மற்றும் கட்சி அலுவலகங்களூடாக வேறு கட்சிகள் மற்றும் குழுக்களின், கட்சிகளின், வேட்பாளர்களின் பெயர்கள் பிரச்சாரம் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்கே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

11. அனுமதியளிக்கப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட கட்சி அலுவலகமெதனையும் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகம்/ தேர்தல் அலுவலகம்/ பிரதேச செயலகம் மற்றும் பொலிஸ் நிலையம் போன்ற நேரடியாக தேர்தலோடு தொடர்புடைய அரச நிறுவனங்களில் இருந்து 150 மீற்றருக்கு குறைந்த தூரத்தினுள் தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. நகர சபைகளுக்காக இவ்வெல்லையை 100 மீற்றர் வரையும், மாநகர சபைகளுக்காக 75 மீற்றர் வரையும் குறைக்க முடியும். வேட்பாளரொருவரின் வீடு இந்த எல்லையினுள் அமையப் பெற்றிருப்பின், மேற்குறிப்பிட்ட தூர எல்லைகள் தொடர்பான உத்தரவு அங்கு செயல்வலுவற்றதாகும். அதேபோல் அரச பாடசாலைகள், வைத்தியசாலைகள், நீதிமன்றத் தொகுதிகள், உள்ளூர் அதிகார சபைகள், அஞ்சல் அலுவலகங்கள் போன்ற பொதுமக்கள் அடிக்கடி சேவைகளைப் பெறுவதற்காக வருகை தருகின்ற அரச நிறுவனங்களுக்கு வருகை தருகின்ற பொதுமக்களுக்கு இடையூறானதாக, அந்நிறுவனங்களுக்க அருகில் அல்லது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மாணவர்களுக்கு இடையூறானதாக அமையும் விதத்தில் அரச பாடசாலைகளுக்கு அருகில் தேர்தல் அலுவலகங்களைத் தாபிப்பதைத் தவிர்க்குமாறு தங்களது முகவர்களையும், மும்முர ஆதரவாளர்களையும் அறிவுறுத்துமாறு அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் செயலாளர்கள் ஆகியோரிடம் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் அரச நிறுவனங்கள் அல்லது பாடசாலைகள் என்பவற்றின் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமையும் விதத்தில் தாபிக்கப்படுகின்ற அலுவலகங்களை அகற்றுவதற்கு நேரிடும்.

12. இவ்வாறான தேர்தல் அலுவலகங்களுக்கு எதிரில் அல்லது அருகாமையில் அல்லது பொது வீதிகளில் வாகன நெரிசல் ஏற்படக்கூடியவாறு அல்லது பொது மக்களுக்கு இடையூறு ஏற்படக்கூடியவாறு வாகனங்களை நிறுத்தி வைப்பதையும், ஒலிபெருக்கி இயந்திரங்கள்/மெகா போன் பாவிப்பதையும், பெரும் எண்ணிக்கையான ஆதரவாளர்களை அணிதிரட்டுவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்பதோடு, அலுவலகங்களைப் பரிசோதிப்பதற்கு வருகை தருகின்ற பொலிஸ் அலுவலர்களுக்கும் தேர்தல் அலுவலர்களுக்கும் அதற்கு ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும். அவர்களுக்கு இடையூறு விளைவித்தல் தேர்தலை நடாத்துவதற்கு விளைவிக்கப்பட்ட இடையூறொன்றாகக் கருதி நடவடிக்கையெடுக்கப்படும்.

13. இப்பணிப்புகள் காரணமாக முன்னைய தேர்தல்களின்போது சில காலமாக அரசியற் கட்சி அலுவலகமொன்றாகப் பேணப்பட்டு வருகின்ற இடமொன்றில் தேர்தற் பிரச்சார அலுவலகங்களைத் தாபிப்பதில் அசௌகரியமேதும் ஏற்படுமாயின், அத்தோடு வாக்கெடுப்புப் பிரிவினுள் அதற்குப் பொருத்தமான வேறு இடமொன்றில்லையெனில், அது தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு விடயங்களைச் சமர்ப்பித்து மாற்று இடமொன்றுக்காக தேர்தல் ஆணைக்குழுவின் விசேட அனுமதிக்காக கோரிக்கையொன்றை முன்வைப்பதற்கான சந்தர்ப்பமொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

14. தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தலோடு தொடர்புடைய பிணக்குகள், தாக்குதல்கள், காயமேற்படுத்தல்கள், மனிதக் கொலைகள், அரசியல் பழிவாங்கல்கள் போன்ற தகாத நடத்தைகளைத் தடுப்பதற்கும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தவிர்ப்பதற்கும் நீதியானதும் சுதந்திரமானதுமான ஒரு தேர்தலை நடாத்துவதற்குத் தேவையான சூழமைவொன்றை உருவாக்கிக் கொள்வதற்கும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் விதிக்க நேரிட்டுள்ளது.

15. இந்த உத்தரவுகளை வேளைக்கேற்றவாறு திருத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு தத்துவமுள்ளதெனவும், அவ்வாறு செய்யப்படும் யாதேனும் மாற்றமொன்று காணப்படுமாயின் அது பற்றி சுற்றறிக்கைகள் மூலம் அறிவிக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

பிரதிகள்:

1. பொலிஸ்மா அதிபர் - *தயவுடன் தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும்.*
2. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள்
   - *தயவுடன் தகவலுக்காகவும் உரிய அலுவலர்களை அறிவுறுத்துவதற்காகவும்.*
3. சிரேட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் (நிருவாகம் மற்றும் தேர்தல்கள்)
   - *தயவுடன் தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும்.*
4. பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் -
   - *தகவலுக்காகவும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களையும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களையும் அறிவுறுத்தி அவர்களுக்கு இக்கடிதத்தின் பிரதியொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காகவும் மற்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கும் சந்தர்ப்பத்தில் உரிய வர்ணத்திலான விண்ணப்பங்களை வழங்குவதற்கும் அத்தோடு, அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் மாதிரிப் படிவங்களில் அலுவலகங்களை தாபிக்கும் பிரிவில் கிராம அலுவலரின் அறிக்கையை வழங்கும் போது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனமெடுக்குமாறு கிராம அலுவலர்களை அறிவூட்டும் பொருட்டும்.*
5. தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள் - *தகவலுக்காக.*
6. கண்காணிப்பு அமைப்புக்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கு
   - *தகவலுக்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்.*


සභාපති
தவிசாளர்
දුරකථන/தொலைபேசி: 011-2868444
ෆැක්ස්/தொலைநகல் :011-2868445
*E-mail: chairman@elections.gov.lk*

මැතිවරණ කොමසාරිස් ජනරාල්
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
දුරකථන/தொலைபேசி:011-2885207
ෆැක්ස්/தொலைநகல் :011-2885208
*e-mail: cge@elections.gov.lk*

ේරේක මැතිවරණ කොමසාරිස් (නීති)
ிகத் தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம்)
කථන/தொலைபேசி: 011-2867471
ක්ස්/தொலைநகல்/Fax : 011-2868448
*nail: electionlegal@gmail.com*

புடிவ இலக்கம் 01

| |
|---|
| *அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிச் செயலாளர் / அதிகாரமளிக்கப்பட்ட முகவர் / சுயேச்சைக்குழுத் தலைவர் விண்ணப்பிக்க வேண்டும்.* |

| |
|---|
| *இந்தப் படிவம் மூன்று பிரதிகளில் நிரப்பப்படல் வேண்டும், கிராம அலுவலர் சான்றிதழை மூன்று பிரதிகளிலும் பெற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் மூன்று பிரதிகளும் பொலிஸ் நிலையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். பொலிஸ் நிலையத்தில் I வைத்துக்கொண்டு மிகுதி இரண்டு பிரதிகளில் ஒன்றை தேர்தல் அலுவலகத்தின் வைத்துக்கொண்டு. மிகுதி ஒரு பிரதி விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும். அது அறிவித்தல் வழங்கப்பட்ட மத்திய பிரச்சார அலுவலகத்தில் வைக்கப்படல் வேண்டும்.* |

உள்ளூர் அதிகாரசபை ..............................................................................

..............................................................................

(கட்சிச் செயலாளர்/சுயேச்சைக்குழுத் தலைவர் / அதிகாரம்பெற்ற முகவர்)

..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

*(பூரணப்படுத்த முன்னர் மறுபக்கத்திலுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும்.)*

2025 ......................

தெரிவத்தாட்சி அலுவலர், ..............................................................

(உள்ளூர் அதிகாரசபையின் பெயர்)

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம், ..............................................................

| அலுவலகப் பாவனைக்கு | |
|---|---|
| வட்டாரத்தின் இலக்கம் | வட்டாரத்தின் பெயர் |
| | |

## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் - 2025
## தேர்தல் பிரச்சார அலுவலகங்களை அமைத்தல்

1. அலுவலகத்தின் வகை: **அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய தேர்தல் பிரச்சார அலுவலகம்**

2. கட்சி / சுயேச்சைக் குழு : ..............................................................

3. அலுவலகத்தின் அமைவிடமும், உரிய காணியின் உரித்தும்:

3.1 முகவரி : ..............................................................................

..............................................................................

3.2 மேற்குறித்த முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு: ..............................................................

3.3. அம்முகவரிக்குரிய வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர்:- ..............................................................

3.4 அம்முகவரியின் உரித்துடைமை:

*(இந்த வளவு, ஏதேனுமோர் அரச நிறுவனத்திற்கு/ நியதிச்சட்ட நிறுவனத்திற்கு உரித்தானதாக இருத்தலாகாது.)*

3.4.1. உரித்தாளியின் பெயர் : ..............................................................

3.4.2. உரித்தாளியின் தேசிய அடையாள அட்டை இல: ..............................................................

3.4.3 உரித்தாளியின் அஞ்சல் முகவரி: ..............................................................

..............................................................

3.4.4 உரித்தாளியின் விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான கையொப்பம்: ..............................................

3.4.5 உரித்தாளியின் தொலைபேசி இலக்கம் : வீட்டு- .................................... கையடக்க- ....................................

4. வெளிப்படுத்துகை

மேற்குறித்த தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் 2025 தொடர்பில் .............................................................. கட்சி/ சுயேச்சைக் குழு சார்பாக தேர்தல் அலுவலகமொன்றை நடாத்திச் செல்வதற்கு அனுமதி கோருகின்றேன். மேற்குறித்த வளவு, அரசிற்கு அல்லது வேறு நிறுவனமொன்றிற்கு உரித்தான ஒரு வளவு அல்லவென்றும், இவ்வலுவலகத்தின்/ காணியின்/ கட்டிடத்தின் உரித்தாளியின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதென்றும் தெரிவிக்கின்றேன். பொதுவான சட்டம், தேர்தல் சட்டம் என்பன மீறப்படாத விதத்தில் நடந்து கொள்வேன் என்றும், மேற்குறித்த கட்சி/சுயேச்சைக் குழு சார்பாக அமைக்கப்படும் இந்த அலுவலகம், இதன் பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய நடாத்திச் செல்லப்படுமென்றும் உறுதியளிக்கின்றேன்.

.............................................................................................. (பதவி இலச்சினை)

*(கட்சிச் செயலாளர் / சுயேச்சைக்குழுத் தலைவர் அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் கையொப்பம்)*

திகதி: ......................................

## <u>அலுவலகங்கள் அமைக்கப்படும் பிரிவின் கிராம அலுவலரின் அறிக்கை</u>

..............................

..............................

இந்த அலுவலகத்தை தாபிப்பதற்கு உத்தேசிக்கும் இடத்தின் முகவரி.............................................................. என்றும் அந்த இடம் எந்தவித அரசாங்க நிறுனத்திற்கும் / நியதிச்சட்ட நிறுவனத்திற்கும் உரித்தானதல்ல, உத்தேச அலுவலகத்திலிருந்து மாவட்ட செயலகம், தேர்தல் அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும் பொலிஸ் நிலையம் என்பன பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தூர எல்லைக்குள் இல்லை என்பதையும் அறிவிக்கின்றேன்.

(பதவி இலச்சினை)

..............................................................

கிராம அலுவலரின் கையொப்பம்

திகதி : 2025

# அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் பிரச்சார அலுவலகம்

| ஏற்புடைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் பூரணப்படுத்துவதற்கு |
|---|

| இந்த அலுவலகத்தை தாபிப்பது தொடர்பில் சிக்கல் இருப்பின் உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் விசாரிக்கவும் |
|---|

தெரிவத்தாட்சி அலுவலர்
......................................... மாவட்டம்/சபை

........................................................................ எனும் அரசியல் கட்சி /........................................................................இன் தலைமையிலான சுயேச்சைக்குழு (இலக்கம் ........., சின்னம் ..................... ) ...........................................................சபைக்கு போட்டியிடுவதால் அந்தக் கட்சி / குழு சார்பாக பின்பக்கத்திலுள்ள தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மத்திய அலுவலகத்தை கொண்டுநடாத்துவது தொடர்பில் ஆட்சேபனை இல்லை.

...............................................
பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கையொப்பம்
பொலிஸ் நிலையம், .............................................

பதவி முத்திரை

திகதி : .......................................

---

| *தேர்தல் அலுவலகத்தின் உரிய அலுவலரினால் பூரணப்படுத்தல் வேண்டும்.* |
|---|

பின் பக்கத்திலுள்ள கட்சியின் / குழுவின் மத்திய அலுவலகத்தை தாபிக்கும் அறிவித்தல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

........................................................................
தெரிவத்தாட்சி அலுவலர்
.......................................... மாவட்டம்/சபை

திகதி : 2025........................

பதவி முத்திரை

---

அறிவுறுத்தல்கள் :

1. தேர்தல் சட்டத்தின் பிரகாரம் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறும் இடத்தில் மாத்திரம் கட்சி/வேட்பாளர் விளம்பரப் பலகைகளைக் காட்சிப்படுத்த முடியும், ஆனால் கட்சியின் பெயர், சின்னம், கட்சித் தலைவரின் படம் மற்றும் தேவைப்பட்டால், அனைத்து வேட்பாளர்களின் படங்களும் அடங்கிய ஒரே ஒரு விளம்பரப் பலகையை மாத்திரம் இந்த அறிவிக்கப்பட்ட மத்திய அலுவலகங்களில் காட்சிப்படுத்த முடியும். அந்த அலுவலகம் அமைந்துள்ள வளாகத்தை அலங்கரிப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. இருப்பினும், நெடுஞ்சாலை, நடைபாதைகள் அல்லது மின்சாரம்/தொலைபேசி இணைப்புகள் அல்லது அவற்றின் கம்பங்களில் இது தொடர்பான எந்த அலங்காரங்களையும் செய்யக்கூடாது.

2. பொலிஸார் அல்லது வேறு எவரேனும் அதிகாரி வருகைதந்து கோருகின்ற போது அலுவலகத்தை அமைப்பதற்கு அறிவிக்கப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். இதுதவிர, அதன் பிரதியொன்றை அலுவலகத்தில் காட்சிப்படுத்தி வைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், உரிய தேர்தல் பிரச்சார அலுவலகத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

3. அலுவலகம் அமைக்கப்பட வேண்டிய விதமும் நடாத்திச் செல்லப்பட வேண்டிய காலக்கெடுக்களும் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய தேர்தல் அலுவலகங்கள் | போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள்/சுயேச்சைக் குழுத் தலைவர்கள்/அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், உள்ளூர் அதிகாரசபை நிறுவனத்திற்கு தலா ஒருவர் என்ற வீதத்தில் | அனுமதி வழங்கப்பட்ட திகதி முதல் அறிவித்தல் வழங்கப்பட் அலங்கரிப்புக்களை **2025.05.03** அகற்றுதல் வேண்டும். |

4. தெரிவதத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள், மாவட்ட தேர்தல் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், பொலிஸ் நிலையங்கள் போன்ற தேர்தலுடன் நேரடியாக தொடர்புடைய எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலிருந்தும் 150 மீட்டருக்குள் எந்தவொரு அறிவித்தல் வழங்கப்பட்ட பிரச்சார அலுவலகமும் நிறுவுவதற்கு அனுமதிக்கப்படாது. இந்த எல்லையை நகர சபைகளுக்கு 100 மீட்டராகவும், மாநகர சபைகளுக்கு 75 மீட்டராகவும் குறைக்கலாம்.

5. ஆரசாங்க மருத்துவமனைகள், உள்ளாட்சி நிறுவனங்கள், தபால் நிலையங்கள், நீதிமன்ற வளாகங்கள் அல்லது அரசாங்கப் பாடசாலைகள் போன்ற பொது இடங்களுக்கு அருகில் பிரச்சார அலுவலகங்களை அமைப்பதைத் தவிர்க்குமாறு செயலாளர்கள்/குழுத் தலைவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், அத்தகைய நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அமைக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் அகற்றப்படும்.

6. அத்தகைய அலுவலகம் ஏதேனும் போக்குவரத்து நெரிசல், இடையூறு அல்லது பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தினால், அந்த அலுவலகத்தை நிறுவுவதற்கான அனுமதி இரத்துச் செய்யப

படிவ இலக்கம் 02

| |
|---|
| *அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிச் செயலாளர்/ அதிகாரமளிக்கப்பட்ட முகவர்/ சுயேச்சைக்குழுத் தலைவரால் விண்ணப்பிக்க வேண்டும்.* |

| |
|---|
| *இந்தப் படிவம் மூன்று பிரதிகளில் நிரப்பப்படல்* *இந்தப் படிவம் மூன்று பிரதிகளில் நிரப்பப்படல்* *வேண்டும், கிராம அலுவலர் சான்றிதழை மூன்று பிரதிகளிலும் பெற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் மூன்று பிரதிகளும் பொலிஸ் நிலையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். பொலிஸ் நிலையத்தில் 1 வைத்துக்கொண்டு மிகுதி இரண்டு பிரதிகளில் ஒன்றை தேர்தல் அலுவலகத்தின் வைத்துக்கொண்டு. மிகுதி ஒரு பிரதி விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும்.. அது அறிவித்தல் வழங்கப்பட்ட வட்டார தேர்தல் அலுவலகத்தில் வைக்கப்படல் வேண்டும்.* |

உள்ளூர் அதிகாரசபை ..............................................................................

..............................................................................

(கட்சிச் செயலாளர்/சுயேச்சைக்குழுத் தலைவர் / அதிகாரம்பெற்ற முகவர்)

..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

*(பூரணப்படுத்த முன்னர் மறுபக்கத்திலுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும்.)*

2025 ........................

தெரிவத்தாட்சி அலுவலர், ..............................................................................

(உள்ளூர் அதிகாரசபையின் பெயர்)

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம், ..............................................................................

| அலுவலகப் பாவனைக்கு | |
|---|---|
| வட்டாரத்தின் இலக்கம் | வட்டாரத்தின் பெயர் |
| | |

## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் - 2025
## தேர்தல் பிரச்சார அலுவலகங்களை அமைத்தல்

| |
|---|
| கட்சி / சுயேச்சைக்குழுக்களின் வட்டாரம் சார்பில் நிறுவப்படும் அறிவித்தல் கொடுக்கபப்பட்ட வட்டார தேர்தல் பிரச்சார அலுவலகம் |

1. கட்சி / சுயேச்சைக் குழு : ..............................................................................
2. அதிகாரம் அளிக்கப்படட முகவரின் / சுயேட்சைக்குழு தலைவரின் பெயர் ..............................................................................
3. அலுவலகத்தை தாபிக்க உத்தேசிக்கும் வட்டாரத்தின் இலக்கம் மற்றும் பெயர் ..............................................................................
4. அலுவலகம் நிறுவப்படும் இடத்தின் முகவரி ..............................................................................
5. அந்த இடத்தின் உரித்துவம்* ..............................................................................

*(இந்த வளவு, ஏதேனுமோர் அரச நிறுவனத்திற்கு/ நியதிச்சட்ட நிறுவனத்திற்கு உரித்தானதாக இருத்தலாகாது.)*

5.1 மேற்படி இடத்தின் கிராம அலுவலர் பிரிவு :..............................................................................

5.2 உரித்தாளியின் பெயர் : ..............................................................................

5.3. உரித்தாளியின் தேசிய அடையாள அட்டை இல: ..............................................................................

5.4 உரித்தாளியின் அஞ்சல் முகவரி: ..............................................................................

..............................................................................

5.5 உரித்தாளியின் தொலைபேசி இலக்கம் : வீட்டு- .................................... கையடக்க- ....................................

5.6 உரித்தாளியின் விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான கையொப்பம்: ..............................................................................

6. **வெளிப்படுத்துகை**

மேற்குறித்த தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் 2025 தொடர்பில் அறிவித்தல் வழங்கப்பட்ட வட்டார தேர்தல் அலுவலகமொன்றை நடாத்திச் செல்வதற்கு அனுமதி கோருகின்றேன். மேற்குறித்த வளவு, அரசிற்கு அல்லது வேறு நிறுவனமொன்றிற்கு உரித்தான ஒரு வளவு அல்லவென்றும், இவ்வலுவலகத்தின்/ காணியின்/ கட்டிடத்தின் உரித்தாளியின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதென்றும் தெரிவிக்கின்றேன். பொதுவான சட்டம், தேர்தல் சட்டம் என்பன மீறப்படாத விதத்தில் நடந்து கொள்வேன் என்றும், மேற்குறித்த கட்சி/சுயேச்சைக் குழு சார்பாக அமைக்கப்படும் இந்த அலுவலகம், இதன் பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய நடாத்திச் செல்லப்படுமென்றும் உறுதியளிக்கின்றேன்.

.............................................................................. (பதவி இலச்சினை)

*(கட்சிச் செயலாளர் / சுயேச்சைக்குழுத் தலைவர் அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் கையொப்பம்)*

திகதி: ....................................................

## <u>அலுவலகங்கள் அமைக்கப்படும் பிரிவின் கிராம அலுவலரின் அறிக்கை</u>

..............................

..............................

இந்த அலுவலகத்தை தாபிப்பதற்கு உத்தேசிக்கும் வட்டாரத்தின் இலக்கம் மற்றும் பெயர் .............................................................................. என்றும் அந்த இடம் எந்தவித அரசாங்க நிறுனத்திற்கும் / நியதிச்சட்ட நிறுவனத்திற்கும் உரித்தானதல்ல, உத்தேச அலுவலகத்திலிருந்து மாவட்ட செயலகம், தேர்தல் அலுவலகம், பிரதேச செயலகம் மற்றும் பொலிஸ் நிலையம் என்பன பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தூர எல்லைக்குள் இல்லை என்பதையும் அறிவிக்கின்றேன்.

.............................................................. (பதவி இலச்சினை)

கிராம அலுவலரின் கையொப்பம்

திகதி : 2025

கட்சி / சுயேச்சைக்குழு சார்பில் நிறுவனப்படும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட வட்டார தேர்தல் பிரச்சார அலுவலகம்

ஏற்புடைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் பூரணப்படுத்துவதற்கு

இந்த அலுவலகத்தை தாபிப்பது தொடர்பில் சிக்கல் இருப்பின் உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் விசாரிக்கவும்

தெரிவத்தாட்சி அலுவலர்
.......................................... மாவட்டம்/சபை

........................................................................ எனும் அரசியல் கட்சி /............................................................................இன் தலைமையிலான சுயேச்சைக்குழு (இலக்கம் ........., சின்னம் .................... ) ...........................................................சபைக்கு போட்டியிடுவதால் அந்தக் கட்சி / குழு சார்பாக பின்பக்கத்திலுள்ள தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அறிவித்தல் வழங்கப்பட்ட வட்டார அலுவலகத்தை கொண்டுநடாத்துவது தொடர்பில் ஆட்சேபனை இல்லை.

..................................................
பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கையொப்பம்
பொலிஸ் நிலையம், ................................................

பதவி முத்திரை

திகதி : ........................................

---

*தேர்தல் அலுவலகத்தின் உரிய அலுவலரினால் பூரணப்படுத்தல் வேண்டும்.*

பின் பக்கத்திலுள்ள கட்சியின் / குழுவின் மத்திய அலுவலகத்தை தாபிக்கும் அறிவித்தல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

..............................................................................
தெரிவத்தாட்சி அலுவலர்
.......................................... மாவட்டம்/சபை

திகதி : 2025........................

பதவி முத்திரை

---

அறிவுறுத்தல்கள் :

1. தேர்தல் சட்டத்தின் பிரகாரம் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறும் இடத்தில் மாத்திரம் கட்சி/வேட்பாளர் விளம்பரப் பலகைகளைக் காட்சிப்படுத்த முடியும், ஆனால் கட்சியின் பெயர், சின்னம், கட்சித் தலைவரின் படம் மற்றும் தேவைப்பட்டால், அனைத்து வேட்பாளர்களின் படங்களும் அடங்கிய ஒரே ஒரு விளம்பரப் பலகையை மாத்திரம் இந்த அறிவிக்கப்பட்ட வட்டார அலுவலகங்களில் காட்சிப்படுத்த முடியும். அந்த அலுவலகம் அமைந்துள்ள வளாகத்தை அலங்கரிப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. இருப்பினும், நெடுஞ்சாலை, நடைபாதைகள் அல்லது மின்சாரம்/தொலைபேசி இணைப்புகள் அல்லது அவற்றின் கம்பங்களில் இது தொடர்பான எந்த அலங்காரங்களையும் செய்யக்கூடாது.
2. பொலிஸார் அல்லது வேறு எவரேனும் அதிகாரி வருகைதந்து கோருகின்ற போது அலுவலகத்தை அமைப்பதற்கு அறிவிக்கப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். இதுதவிர, அதன் பிரதியொன்றை அலுவலகத்தில் காட்சிப்படுத்தி வைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், உரிய தேர்தல் பிரச்சார அலுவலகத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
3. அலுவலகம் அமைக்கப்பட வேண்டிய விதமும் நடாத்திச் செல்லப்பட வேண்டிய காலக்கெடுக்களும் பின்வருமாறு:-

| | |
|---|---|
| அறிவித்தல் கொடுக்கப்பட்ட வட்டார தேர்தல் அலுவலகங்கள் (வட்டார அலுவலகங்கள்) | அனுமதி வழங்கப்பட்ட திகதி முதல் அறிவித்தல் வழங்கப்பட் அலங்கரிப்புக்களை **2025.05.03** ஆம் திகதி நள்ளிரவின் பின்னர் அகற்றுதல் வேண்டும். |

4. ஒரு உள்ளூராட்சி நிறுவனத்தின் ஒரு வட்டாரத்திற்கு போட்டியிடும் ஒரு கட்சி/சுயேச்சைக் குழுவால் ஒரே ஒரு அறிவித்தல் வழங்கப்பட்ட வட்டார அலுவலகத்தை மாத்திரம் நிறுவ முடியும்.
5. தெரிவதத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள், மாவட்ட தேர்தல் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், பொலிஸ் நிலையங்கள் போன்ற தேர்தலுடன் நேரடியாக தொடர்புடைய எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலிருந்தும் 150 மீட்டருக்குள் எந்தவொரு அறிவித்தல் வழங்கப்பட்ட பிரச்சார அலுவலகமும் நிறுவுவதற்கு அனுமதிக்கப்படாது. இந்த எல்லையை நகர சபைகளுக்கு 100 மீட்டராகவும், மாநகர சபைகளுக்கு 75 மீட்டராகவும் குறைக்கலாம்.
6. ஆரசாங்க மருத்துவமனைகள், உள்ளாட்சி நிறுவனங்கள், தபால் நிலையங்கள், நீதிமன்ற வளாகங்கள் அல்லது அரசாங்கப் பாடசாலைகள் போன்ற பொது இடங்களுக்கு அருகில் பிரச்சார அலுவலகங்களை அமைப்பதைத் தவிர்க்குமாறு செயலாளர்கள்/குழுத் தலைவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், அத்தகைய நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அமைக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் அகற்றப்படும்.
7. அத்தகைய அலுவலகம் ஏதேனும் போக்குவரத்து நெரிசல், இடையூறு அல்லது பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தினால், அந்த அலுவலகத்தை நிறுவுவதற்கான அனுமதி இரத்துச் செய்யப்படும்.